வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4177/ஆ4/2024 நாள் 24.01.2025

பொருள் தேர்வுகள் – –தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS) பிப்ரவரி 2025 பள்ளி மாணவர்களின் விவரங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்தல் கால அவகாசம் நீட்டித்தல் – தொடர்பாக

பார்வை 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் நஎண்.க..018922 /டி3 /2025 நாள் 08.01.2025
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 08.01.2025
3. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் நஎண்.க..018922 /டி3 /2025 நாள்.24.01.2025

======================

பார்வை 1–ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்திற்கிணங்க 2024–2025–ம் ஆண்டிற்கான தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS) 22.02.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்தல் மற்றும் கட்டணத்தொகை செலுத்துவதற்கான கடைசி நாள் 25.01.2025 என தெரிவிக்கப்பட்டது.

தற்போது, பார்வை 3–ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க மாணவர்களின் நலன் கருதி இத்தேர்விற்கான விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கான கால அவசாசம் 29.01.2025 மாலை 6.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள தேதிக்குப் பிறகு கால அவகாசம் நீட்டிக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் : 29.01.2025**

**ஆன்லைன் கட்டணம் செலுத்த இறுதி நாள்.29.01.2025**

**Summary Report உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள். 30.01.2025**

நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் உரிய இணைப்புச் சான்றிதழ்களுடன் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் பள்ளி அளவிலேயே வைத்துக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பணி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் மாணவர்களின் நலன் கருதி தலைமையாசிரியர்கள் தனி கவனம் செலுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஒம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
- அனைத்து அரசு பள்ளிகள்,அரசு உதவி பெறும் பள்ளிகள் /மாநகராட்சி/நகராட்சி /ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ,வேலூர் மாவட்டம்.

நகல்
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.